1982 பிப்ரவரி 6]

உரம் பூச்சி மருந்துகளின் விலைகளைக் குறைப்பதற்கான நடவடிக்கை.

* வினா எண். 71— திரு. என். பழனிவேல் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உரம், பூச்சி மருந்து போன்ற விவசாய இடு பொருட்களின் விலைகளைக் குறைக்க வேண்டுமென்று மைய அரசை நம் மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) பூச்சி மருந்துகளின் விலையைக் குறைக்க வேண்டு மென்று நம் அரசு மத்திய அரசு நடத்திவரும் கூட்டத் தொடரிலும் ஆலோசனைக் கூட்டங்களிலும் வலியுறுத்தி வருகின்றன. உரங்களைப் பொறுத்தவரை மைய அரசு 1980ஆம் ஆண்டில் ஜூன் மாதம் உர விலையை ஏற்றியபோது உர விற்பனையில் மானியங்கள் வழங்க வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுள்ளது. அதற்குத் தகுந்த பதில் இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உரம், பூச்சி மருந்துகள் போன்ற விவசாய இடுபொருட்களின் விலை சமீபத்தில் மிகப் பெரிய அளவுக்கு உயர்த்தப்பட்டது. இது சம்பந்தமாக, மத்திய அரசோடு நமது மாநில அரசு வெறும் கேட்டுக் கொண்டு மட்டும் உள்ளதா அல்லது எழுத்து பூர்வமாகக் கோரிக்கை வைக்கப் பட்டு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, கேட்டுக் கொண்டிருக்கிறது, எடுத்துக் கூறியிருக் கிறது. எழுத்து மூலமாகவும் தெரிவித்திருக்கிறது.

திரு. ஏ. சி. சண்முகம் : துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு மிக அத்தியாவசியத் தேவையான உரம் மற்றும் பூச்சி மருந்துகள் விலையை ஆண்டு தோறும் குறைக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறோம். ஆனால் மத்திய அரசு அதை ஆண்டுதோறும் உயர்த்திக் கொண்டு வருகிறது. ஆனால நெல்லுக்கு விலையை உயர்த்தித் தர வேண்டும் என்றால் அதற்கு மறுத்துக் கொண்டு வருகிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தனக்கே உரிய பாணியில் மத்திய அரசை வற்புறுத்துவாரா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அந்த வேலைதான் நடந்து கொண்டிருக்கிறது.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உரம், பூச்சி மருந்து விலை ஏற்றம் சம்பந்தமாக கேட்டுக் கொண்டிருக்கிறோம், எழுதிக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மிகவும் தைரியம் வாய்ந்தவர். அவர் நெல்லுக்கு விலை கொடுக்காததைத் தட்டிக் கேட்பதற்கும், இந்தப் பூச்சி மருந்து விலையைக் குறைப்பதற்கும் இந்தச் சபையிலேயே ஒரு தீர்மானம் கொண்டு வந்து அதை நிறைவேற்ற முயற்சி எடுப்பாரா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: துணைத் தலைவர் அவர்களே, தெரிவிக்க வேண்டிய விதத்திலே எல்லாம் தெரிவித்திருக்கிறோம். மத்திய அரசு கேட்கவில்லை என்றால் அதைப் பற்றிச் சிந்திக்கலாம்.

திரு. இல. பலராமன்: துணைத் தலைவர் அவர்களே, உரத்தின் விலையை நிர்ணயிப்பது மத்திய அரசு என்று கருதினாலும், பூச்சி மருந்துகளின் விலையை மாநில அரசே கட்டுப்படுத்தலாம் என்ற நிலை இருக்கும்போது, அதன் மேல் நடவடிக்கை எடுப்பதற்கு மாநில அரசு ஆர்வம் காட்டி, மாநில அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இரண்டையுமே மத்திய அரசுதான் நிர்ணயிக்கிறது.

(முற்பகல் 9·50)

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமீபத்திலே நமது பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் அறிவித்துள்ள 20 அம்சத் திட்டத்திலே உணவு உற்பத்தியை ஊக்குவிக்கவும், சிறு விவசாயிகளை ஊக்குவிக்கவும் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக இன்றைக்கு மத்திய அரசு சொல்லிக் கொண்டு இருக்கிறது. இந்தப் புதிய 20 அம்சத் திட்டத்தின் மூலமாவது சிறு விவசாயிகளுக்கு உரம், பூச்சிமருந்து போன்றவற்றை வாங்குவதற்கு ஏதாவது மானியம் கொடுக்கும் அம்சம் இருக்கிறதா? அப்படி இருந்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவைக்கு அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஓரளவு நிலம் வைத்துள்ளவர்களுக்கு மண் சத்து, சாம்பல் சத்து, உரங்கள் வாங்குவதற்கு 33 1/3 மானியம் வழங்கப்படுகிறது. அதிலே பாதித் தொகையை மத்திய அரசு ஏற்கிறது. வேறு வகையான எந்தவிதமான உதவியும் இல்லை.